# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2329/20 - 2023 අප්‍රේල් මස 25 වැනි අඟහරුවාදා - 2023.04.25

*2329/20 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**பதுளை முதியங்கனை ரஜ மகா விகாரையின் வருடாந்த பெரஹரா உற்சவம்**

*362 ஆம் அதிகாரமான தலயாத்திரை கட்டளைச் சட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள 1948, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 1951, ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய 10283 ஆம் இலக்க வர்த்திமானி அறிவித்தலிலும் 1955, மாச்சு 25 ஆந் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும், 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகார ஒப்படைப்பு (பிரதேச செயலாளர்களுக்கு) சட்டத்தின் படியும், 2011.06.10 ஆந் திகதிய 1710 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் வெளியிடப்பட்ட பதுளை முதியங்கனை ரஜ மகா விகாரையின் (வருடாந்த பெரஹரா உற்வசம்) தொடர்பான யாப்பின் படியும் பதுளை பிரதேச செயலாளர் டீ. எம். எல். எச். திசானாயக்க ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2023 ஆம் ஆண்டின் பதுளை, முதியங்கனை ரஜ மகா விகாரையின் வருடாந்த பெரஹரா உற்சவம் தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைகளை பிறப்பிக்கிறேன்.*

*1.* பதுளை முதியங்கனை ரஜ மகா விகாரையின் வருடாந்த பெரஹரா உற்சவம் *2023*, மே மாதம் *04* ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு, *2023*, மே மாதம் *05* ஆந் திகதி வீதி ஊர்வலம் முதியங்கனை ரஜ மகா விகாரையினை வந்தடைந்தவுடன் நிறைவுறும் என்பதை அறியத் தருகிறேன்.

*2.* பெரஹராவின் பயணமார்க்கம்

*2023*, மே மாதம் *04* ஆந் திகதி விகாரையின் உள்ளே பெரஹரா உற்சவம்

*2023*, மே மாதம் *05* ஆந் திகதி வீதி ஊர்வலம் முதியங்கனை விகாரையிலிருந்து ஆரம்பமாகி புகையிரத நிலைய வீதி, அநகாரிக தர்மபால மாவத்தை, கீழ் ராஜ வீதி, ராஜ வீதி, நூலக மாவத்தை, கீழ் வீதியினூடாக (லோவர் வீதி) முதியங்கனை விகாரையை வந்தடைதல்.

*3.* பதுளை முதியங்கனை விகாரைபூமி மற்றும் விகாரை சுற்றுப்புற பூமிகளில் உணவு சமைத்தல், வியாபாரம் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

4. பெரஹரா காலத்திற்குள் பிரதான பாதையில் தனியார் வாகனங்களை நிறுத்தி வைப்பதை தடை செய்கிறேன். துவிச்சக்கரவண்டி, மாட்டு வண்டி உட்பட அனைத்து வாகனங்களும் எனது அல்லது விகாரையின் பொறுப்பான, நிலமே அவர்களின் அனுமதிப் பத்திரம் இல்லாமல் விகாரைக் காணிக்குள் வருவதைத் தடை செய்கிறேன்.

5. பெரஹரா ஊர்வலம் செல்லும் பாதைகளில் பதுளை மாநகர சபையினால் முறையான அனுமதியுடன் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடங்கள் மற்றும் தற்போது உள்ள, நிரந்தரக் கட்டிடங்கள் சுகாதாரத் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும், காணிப்பகுதிகளை குத்தகைக்கு வாங்கும் வியாபாரிகளினால் விகாரையின் பெரஹராவின் பின் தமது தற்காலிகக் கட்டிடங்களை அகற்றியதன் பின், பெரஹரா பயணிக்கும் பாதை மற்றும் விகாரைக் காணிக்குள் உள்ள பொலித்தீன் உட்பட அனைத்துக் குப்பைகளையும் ஒன்று சேர்த்து பொது சுகாதாரப் பரிசோதகரின் ஆலோசனையின் படி அகற்ற வேண்டும்.

6. என்னிடம் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரம் இல்லாமல் விகாரைக் காணி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் எந்தவொரு தற்காலிகக் கட்டிடங்களையும் அமைப்பதை தடை செய்கிறேன்.

7. எவரேனும் ஒருவரினால் என்னிடம் அல்லது பதுளை மாநகர சபையின் அனுமதி இல்லாமல் பாதையாக பயன்படுத்தலோ அல்லது ஒதுக்குவதோ அல்லது ஏதேனும் காணி அல்லது விகாரைப் பிரதேசத்திற்குள் ஏதேனும் காணியைப் பயன்படுத்தி குடிசையோ அல்லது ஏதேனும் கட்டிட நிர்மாணிப்போ அல்லது பெரிதாக்குதலோ மேற்கொள்ளக்கூடாது.

8. பட்டாசு போன்றவற்றை பிரதேசத்திற்குள் பற்றவைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

9. பிரதேச செயலாளரின் அல்லது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒருவரின் அனுமதி இல்லாமல் எவரேனும் ஒருவரினால் விகாரைபூமி மற்றும் விகாரை சுற்றுப்புற பிரதேசங்களில் சீட்டுக்கள், கொடிகள் விற்பனை மற்றும் வேறுவகையான எந்தவொரு விடயத்திற்காகவும் பங்களிப்பு நிதி வசூலிக்கவும் கூடாது.

**டீ. எம். எல். எச். திசானாயக்க,**
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பதுளை ,
2023, ஏப்பிறல் 04.

EOG 04- 968